உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவுறந்தைப்

# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

உறையூர் வித்வான்

## சி. வாஞ்சைலிங்க வைத்தியநாதசெட்டியா

ரவர்களால்

இயற்றப்பட்டு,

திருத்தவத்துறை மிராசுதாரர்

ம-ா-ா-ஸ்ரீ

தம்பாச்சியாபிள்ளை குமாரர்

## கனகசபைப்பிள்ளை யவர்களால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சார்வரிஸு ஆவணிமீ. 1900

உ

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

---

சென்னை அஷ்டாவதானம்

## பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

நறையூர்பூந் துடவையிந ஞாயகரினு நணிகஞறு நளினி சூழ்ந்த
வுறையூர்நற் பெருமார்க்குப் பதிற்றுப்பத் தந்தாதி யுசித மேவு
முறையூர்புத் தமுதனைய சுவைபலியுஞ் செஞ்சொற்கண் முயவகச செ
ர்ற்றான், பொறையூர்நம வாஞ்சைலியக வைத்தியநா தப்புலவன் புகழ்
[மிக் கோனே.

இப்பிரபந்தஞ் செய்தவர் மாணாக்கரு ளொருவராகிய

**கீழப்பழூரில் வசிக்கும் தவத்துறை**

## ஸ்ரீ. அப்பாவு பிள்ளையவர்களாற்

செய்யப்பட்டது.

மாமேவு முலகினிற் சென்னிநா டிதுவென
வயஙகுநற் சென்னி நாட்டின்
மாதலம தாமுறந் தைப்பதியின் மாலூர
மரநிழலில் வாழ்பதி யினற்
றாமேவு மம்போ ருகச்சரண மீதிற்
றுலங்கவே பப்பத் ததாங்
துகளிலந் தாதிகண் டான்கண்டு பயமெனச
சொல்லிப் புகழ்ந்து போற்றத்
தேமேவு மாலையணி மால்சிதம் பரவேள்செய்
தியநல் வரபுத் திரன
தியாகரா ஜப்பெயர்கொள் புலவனன் மாணவன்
சித்தாந்த வேதாந்த நூல்
பாயேவு பஞ்சல ட்சணவிலக் கியவுததி
பருகிமழை பொழிபு மேகம்
பக்தாபுகழ் வாஞ்சைலிய கம்வைத் தியநாத
பாவலவ னென்குர வனே.

## திருப்பரங்குன்றம்
## அ. நாராயணசரணரவர்களாற்
### செய்யப்பட்டது.

சீர்பூத்த செம்பியனுக் குறைவிடமா நகரிறைக்குச் சிதையா வன்பி,
னோர்பூத்த பதிற்றுப்பத் தந்தாதி யெனும்பெயரு மிலங்க நாட்டிப்,
பேர்பூத்த சொற்சுவையும் பொருட்சுவையு மொருங்கமைத்துப் பிறங்
கச் செய்தான், பார்பூத்த வணிககுலச சிதம்பரவேள் செய்தவத்தின்
பயனுற் றோன்றி.

தொகைநூலும் வகைநூலும் விரிநூலு முழுதுணர்ந்து துகடீ ரன்
பின், றகைசான்ற வுளமுடையார் குழுவகலாத் தன்மையினான் றமிழ்
நூ லாய்ந்து, வகைவிடையா னடிமறவாத் தியாகராஜப்புலவ னுதவப்
பெற்ற, வகையமைந்த கல்வியினான் வாஞ்சைவைத் தியநாத வண்மை
யோனே.

இப்பிரபந்தஞ் செய்தார்பாற் கல்விபயின்றவராகிய

## உறையூர்
## செ. சாமிநாதபிள்ளையவர்களாற்
### செய்யப்பட்டது.

பாமேவு திருவுறந்தை யாலூரத் தடியமரும் வரதன் றருளிற்
றூமேவு பதிற்றுப்பத் தந்தாதி யெனுஞ்சொற்றூர் துதித்த ணிந்தா
னாமேவு பலகலையு நன்குணர வுணர்த்தியெனை யாளு நாதன் [னே.
பூமேவு வாஞ்சைவைத் தியநாத னெனும்பெயர்கொள் புலமை யோ

ஷை யூர் வெஸ்லியின் மிஷியோன்

## ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
## சுப்பிரமணிய பிள்ளையவர்களாற்
### செய்யப்பட்டது.

உலகுபுக ழுறந்தைநக ருயர்வில்வ வனநிழலி லொளிர்வெண்
டிங்க, ளிலகுபரஞ் சுடர்ப்பரம னிணையடிக்குப் பொருத்தமுற வினிய
தீஞ்சொற், பலகலைக ளுடனுய்ந்து பதிற்றுப்பத் தந்தாதி பகர்ந்தான்
மேலோர், நலமிகுத்த சிதம்பரவே ளீன்றவைத் தியநாத நாவ லோனே.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவுறந்தைப்
# பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

சீரா ருறந்தைப் பதிவாழுந் திகழை வண்ணன் மலரடிக்குப்
பாரார் பதிற்றுப் பத்தென்று பகரந் தாதி பாடுறவே
யேரார் சித்தி புத்திகளை யிமையோர் போற்ற மணந்தருளுங்
காரார் கரிமா முகத்தவனைக் கருதி வாழ்த்தி வணங்கிடுவாம்.

## சமயாசாரியர்.

காழி வந்த கவுணியப் பிள்ளையை
யாழி நீந்திய வப்பனு ரூரனை
வாழி செம்மணி வாசக வள்ளலைப்
பாழி வெந்துயர் போக்கப் பணிகுவாம்.

## நூல்.

திருவார் கமலச் சேவடியுந் தேனார் கொன்றைச் சடைமுடியு, மருவார்காந்தி மதியிடமும் வரதா பயமு மழுமானுங், கருதார் புரங்க ளொருமூன்றுங் கனிபுன் னகையா லெரித்தருளு, மொருமா தேவ காட்டியொன்று முரையா தொழிதல் முறையேயோ. (க)

முறையே யில்லாக் கடைநாயேன் முன்னே யடிமை யுனக்கானே, னிறையே யெனக்காண் டவனீயே யிதுவோ வனாதி வழக்காகும், குறையா தொன்று மில்லாக்குக் குடமா நகரி லுறைவோனே, கறையார் கண்டத் தெண்டோளா காக்கக் கடமை நினைக்காமே. (௨)

ஆமே தனக்கோ ரிடமாக்கொண் டமர்வோ னயனிந் திரன் விண்ணோர், தாமே முதலென் றுணையுணராத் தற்போ தத்தான் மாண்டார்க, ளாமே புரியும் பகரேர்ந்து நமன்றன் வரினு னென்செய்வேன், பாமே வுறுங்கூ விளவனத்தெம் பதியே கதியை யருள்வாயே. (ங)

அருள்வாய் காந்தி மதியொடுசென் றடியார்க் குறுதுன் பினையகற்றி, மருள்வாய் மனப்பா தகனுனக்கு வழங்கே ன ருணீ யென்பாயே, லிருள்வாய் வன்றி யுருவெடுத்த விரும்பா தகனை முன்பாண்டாய், தெருள்வா யுதங்க முனிபோற்றுந் தேவே யதனை மறந்தாயோ. (ச)

மறந்தா யுறந்தைப் பதிவாழு மாதே வன்றன் மலரடி யைத், திறந்தான் சிறிது மில்லாப்புன் னெஞ்சே தீமை யக ன்றினிமே, னிறந்தா னுதங்க முனிக்கைந்து நிகழக் காட்டி யாண்டருளுஞ், சிறந்தார் போற்றும் வில்வவனத் தேவைத் தியானித் துய்வாயே. (ரு)

உய்வாய் பொழுது நினையன்றி யுண்டோ மற்றோர் தெ ய்வமென, மெய்வாய் மறையா கமங்களெலா மெய்வே றின் றென் றுணர்த்தியவான், மொய்வாய் மானூ ரத்தடிவாழ் முத ல்வா முக்கண் வானவனே, யைவாய் செல்லு மவாவினையற் றவர்கள்போற்று மைவண்ணா. (சு)

வண்ணா விரண்டா யிரமுடையான் வாழ்த்தி வணங்கு மாமணியே, கண்ணா யிரந்தா னுடையானுங் கம்பூன் றானு நா ன்கானு, மண்ணா வப்பா வையாவென் றலறிக் கதறிக் காணு நின், றண்ணார் கமலத் தாட்டுணையென் றலையிற் சூட்டி யாண் டருளே. (எ)

அருளே பொழியுங் காந்திமதி யம்மை யிடமு மறவிடையு, மருளே தீர்முப் பானந்தான் வயங்கு மவத்தை தனிற்காட்

டிப், பொருளே யமைமுக் கீச்சரம்வாழ் பொன்னே மணியே
யருள்வாயே, யிருளேய் மனத்தேன் றனக்கருள லேலா தெ
ன்பா ரிலைமன்னே. (௮)

இல்லும் வில்லுங் கல்லானை யிமையோ ரேத்தும் பெரு
மானை, யல்லும் பகலு மானானை யயன்மால் காண்டற் கரியா
னைச், சொல்லும் பொருளு மானானைச் சோமுன் றெரித்த
நகையானைக், கொல்லுங் கரியை வெல்லுங்குக் குடமா நகரிற்
கண்டேனே. (௯)

கண்டா ரெல்லா மிவனாரென் றென்றே கருதி யதிசயி
ப்பப், பண்டே செய்த வினையாவும் பறந்தே விடைகொண்
டேயகலத், தண்டா யுதனுங் கண்டோடத் தமியேன் றலையி
லடிசூட்டிக், கொண்டான் றனக்கே யாளாக்கிக் கோழிப் பதி
யி லுறைவானே. (௧௦)

### வேறு.

வானமே முதலா வைம்பெரும் பூதம் வயங்கரி மதியிய
மான, னைமூர்த் தமுமா யயனரி முதலா வமைந்திடு மொன்
பது மாகி, வானவா சிகளும் வசுந்தரை யோரும் வணங்கவா
ரணப்பதி யமரு, ஞானநா யகனே யெனைப்பொருட் படுத்தி
நயந்தருள் செய்வதெந் நாளோ. (௧௧)

நாளெலா மவமே கழித்தன னினது நாண்மல ரடியிணை
மறந்தே, கோளெலா மெனக்கே சொந்தமா வுடையேன்
கொடுஞ்சமன் வரினெவன் செய்வேன், வேளெலாப் படையு
மிழந்துவெந் தொழிய வெந்தழற் கண்ணினைத் திறந்தோய்,
தூளெலாம் பொழிபூங் கூவிள வனத்துச் சோதியே யாதிநா
யகனே. (௧௨)

நாயக னமர ரிந்திரன் பிரம னாரணன் முதலியர் தமக்குத்,
தூயவ னுறந்தைப் பதியினி லமர்ந்தோன் றனையடிப் புகழி

னை வழுத்தி, யாயமா திரத்தா ரெடுத்தெடுத் தேத்த வருள் பெறு மதுரநா வலர்கள், மாயமா கியமா லிந்திரன் வாழ்வை மனத்திடை மதிப்பது மிலையே. (கங)

மதியவிர் கங்கைச் சடைப்பெருங் கருணை வள்ளலே தெள்ளிய வமுதே, நுதியவிர் வாட்கை நாரணன் முதலோர் நுகரும்வான் செல்வமு மண்ணிற், பதியவிர் வாழ்க்கை மணிமுடியரசர் படைத்திடுஞ் செல்வமும் வேண்டேன், பொதியவிர்நதலர்பூஞ் சோலைசூ ழுறந்தைப் புண்ணியா விண்ணவர்க் கிறையே. (கச)

விண்ணவர்க் கிறைவன் வேண்டவெண் கரியும் விரைமலர்க் கற்பகத் தாரு, மண்ணிய வுச்சைச் சிரவமு முதலா வயங்கிய பொருளெலாந் தனது, தண்ணிய வருளாற் றந்தருளெனது சாமியாங் குமரனை யீன்ற, வண்ணலே யுறந்தைப் பதியினி லமரு மையனே காத்தருளெனையே. (கரு)

காத்தருள் புரியுங் கடனுனக் கென்றே களித்திருக் கின்றனன் வறிதே, யாத்தமா மறையா கமங்களிற் சொல்லு மருநெறி தன்னையே கைவிட், டேத்தையா முடலையோம்பியே தினமு முண்டுதின் றுடுத்தியே யருள்வாய், வாய்த்தசீ ருறந்தைப் பதியினி லமரும் வள்ளலே தெள்ளிய வமுதே. (கசா)

தெள்ளிய வமுத லிங்கமென் றொருபேர் திருக்கடவூரினிற் பெற்றாய், நள்ளிய பனவச் சிறுவனை யாண்டேநயந்துனைப் பாடினே னருள்வாய், வள்ளிய வறிஞர் போற்றுறு முதங்க மறையவ னாகிய முனிவற், கொள்ளிய சித்த சுத்தியையளித்த வுறந்தைவா ழைவண்ண மணியே. (கஎ)

ஐவண்ண மணியே பழமறைக் கொழுந்தே யலையெறியமுதவா ரிதியே, கைவண்ணத் தவனுங் கமலவே தியனுங்

காணரு நின்றிரு வடிமை, யுய்வண்ண வடியேன் புன்றலை சூட்டி யுறுதுயர் போக்குநா ளுளதோ, மெய்வண்ணப் பெரு மா மறைபயி லுறந்தை மேவிய சோதிநா யகனே. (௧௮)

சோதியே யெனைநீ சோதனை புரியேல் சோதிக்கத் தொடங்கிடு வாயே, லாதியே யுனக்கே யபயமென் றடியே னச் சினை விடத்தொடங் கிடுவேன், காதிசே யாய கௌசிகன் றனக்குக் கடுஞ்சின வசிட்டன் றுன் பொழித்த, நீதியே செல்வ நிறைதிரு வுறந்தை நிமலனே யமலவாழ் வருளே. (௧௯)

அமலவாழ் வாநின் னடியினிற் சேர்த்தே யஞ்சலென் றடியனை யருள்வாய், கமலநான் முகனுங் கருடகே தனனுங் கனவினுங் காண்டரு மணியே, விமலமா முனிவர் சித்தர்கள் போற்ற வில்வமூ லத்தினி லமரும், பமரமார் கூந்தற் பனிமொழித் துவாவாய்ப் பருவத வல்லிகா தலனே. (௨௦)

## வேறு.

காத லாகிக் கசிந்து கசிந்துநின்
சீத வாரிசச் சேவடி போற்றவே
போதன் காலன் புரிதுய ரற்றவே
யோத நீர்சூ ழுறந்தையெம் மண்ணலே. (௨௧)

உறந்தை மேவிய வுத்தம னேயுனை
மறந்து தீய வினையின் வலியினாற்
பிறந் திறந்து பெரிதிளைத் தேனருள்
பறந்து போகப் பழவினை யாவுமே. (௨௨)

யாவு மாகியு மல்லன வாயுமுத்
தேவு மாகியுந் தேவர்க ளியாவர்க்குங்
கோவு மாகியுங் கோழி நகருறை
பாவ நாச வருள்பஞ்ச வண்ணனே. (௨௩)

வண்ண வாரண மாநகர் மேவிய
வண்ண லேயுன் னடியிணை யன்றியோர்
பண்ண வர்கள் பதவியும் வேண்டிடே
னுண்மை யுண்மையீ துண்மை யெனைவிடேல். (உச)

என்னை யென்னையீ தென்னுடை மாதவம்
முன்னை நன்னெறி யாது முயன்றிலேன்
பொன்னை யன்னநின் ருள்போற்ற வைத்தனை
யன்னை யன்ன வமர்கோழி யண்ணலே. (உரு)

அண்ண லேயுன் னருமைத் திருவடி
யெண்ணி லேனிதற் கென்ன புரிகுவேன்
புண்ணி னேன்செய் புரைபொறுத் தாடியால்
விண்ணி னீள்வில்வ கானத்து வள்ளலே. (உசா)

வள்ள லேயுன் னடியை வழுத்தவென்
னுள்ள மென்றன் வசத்துற்ற தில்லையா
லெள்ள லையவோ வேழையென் செய்குவேன்
கொள்ளை யின்ப நிறைகோழி யப்பனே. (உஎ)

அப்ப னென்னுடை யன்னை குருதெய்வந்
துப்ப னென்னுயிர் துமதி யானவன்
தப்பொன் றில்லாத் தனுக்கே தனன்புக
ழொப்பொன் றில்லா வுறந்தைவா ழத்தனே. (உஅ)

அத்த னேயுறை யூரி லமர்ந்தரு
ளத்த னேவிடை யூர்க்கொண்ட நாதனே
பித்த னேன்செய் பிழையைப் பொறுத்திடிற்
சுத்த வன்பர்கள் சொல்லுவ ரேதமே. (உகூ)

ஏதி லானிவ னென்றெனைக் கைவிட
லீதி யோவரு ளின்மலை மேவுறு

பாதி யேகுறைப் பான்மதி சூடிய
வாதி யேயுறை யூருறை யையனே. (௯0)

**வேறு.**

ஐயனே நினதற் புதத்திருக் கோயி லடியனேன் புகவ
ருள் புரிவாய், வையக முழுதுஞ் சையென வெறுக்க வரம்பி
கந் திரந்துழல் பவரும், வெய்யவா பாசக் கருக்குழி பலவும்
வெருதுய ருறப்புகு வோருங், கையரு மென்றும் புகுதரா
வுறந்தைக் கடிநக ரமர்பெருந் தேவே. (௯க)

தேவொரு மூன்று மாகிமுத் தொழிலுஞ் செய்தொரு
தொழிலுமில் லாதோய், நாவர சருள்சேர் ஞானசம் பந்தர்
நம்பிமுன் னோர்களை யாண்ட, மாவர சரோரு கமலர்நேரடி
யின் மதித்தெனைச் சேர்த்தருள் புரிவாய், கூவர சாங்குக் குட
க்திருப் பதியிற் கூவிள வனத்துறை பவனே. (௯உ)

உறைபுரை யெனது புரமொரு மூன்று மொண்கதிப
பனியெனப் போக்கி, மறைமுழு துணர்மா தவச்சன காதி
மாமுனி வரர்க்கினி தளித்த, நிறைசிவா நந்தத் திருவடி யிரு
த்தி நித்திய ஞக்கியாண் டருள்வாய், பொறைநீகர் சிறையோ
ரைந்துசூ ழுறந்தைப் புண்ணியா நண்ணரும் பொருளே. ()

பொருளிலே யுலக மிருத்தலா லதனைப் புரிந்திது வரை
யெவர் பாலு, மருவினே னலன்மேன் மருவவு மாட்டேன்
மதித்தெனைக் காத்தருள் புரிவா, யருளெலாந் திரண்டோ ரற்
புத வடிவா யமர்ந்தொளிர் தருபர சிவமே, திருவெலா மொ
ருங்கே தருதிரு வுறந்தைத் திருத்தளி யமர்பெரும் பதியே.

பதிபசு பாச வியலொரு மூன்றும் பகுத்தறி வுறுத்திய
பின்னர், நதிபதி யமர்நா ரணன்முத லோர்க ணனவினுங் கன
வினு மறியாத், துதிபெறு நினது திருவடி சேர்த்துத் தூய்

மைப ஞக்கியாண் டருள்வாய், பொதி யவிர்ந் தலர்பூம் பொய்கைசூ ழுறந்தைப் பொற்றளி யமர்ந்ததே சிகனே. (௩௫)

தேசிக மூர்த்த மாகிவந் தடியேன் றீவினை போக்கியாண் டருள்வாய், காசிபன் மனைவி கத்துரு வினதை கலுழ்ன்கார்க் கோடனை யளித்த, மாசிலா மணியே மன்றத்தி லின்ப மாநடம் புரிகின்ற பதியே, பேசிட முடியாப் பெருந்திரு வுறந்தைப் பெருந்தளி யமர்ந்தருள் பவனே. (௩௬)

பவமெனுங் கடலிற் கிடந்துழல் கின்ற பாவியேன் படுந்துயர் போக்கிச, சவமென வுலக நவின்றிடா வணநின் றுண்மலர் சேர்த்தருள் புரிவா, யவநெறி போக்கித் தவநெறி செலுத்தி யடைந்தவர் தமக்கினி தருளுஞ்,சிவநெறி யுடையோர் சூழ்தரு முறந்தைத் திருத்தளி யமர்ந்தசின் மயனே. (௩௭)

சின்மய மாய தில்லையம் பலத்திற் றிருநெடு மான்முழ வறையத்,தென்முக நோக்கிக் கன்மகள் களிக்கத் திருநடம புரியுநின் னடியைக், கன்மனத் தடியேன் கண்டுகண் களிக்கக் காட்டியாண் டருளுநா ளெதோ, பொன்னெடுஞ் சிகரி பொலிதிரு வுறந்தைப் பொற்றளி யமர்ந்தருள் பரனே.(௩௮)

பரமொரு தானென் றுனையிகழ்ந் தெதிர்ந்த பங்கயனொருசிர மிழந்தான்,சிரமொரு மூன்று கொண்டுளா னெதிர்ந்து திருக்கழு முளுக்கிரை யானன், புரமொரு மூன்றுமெரித்தபுன் னகையாய் போற்றுறு மெற்கருள் புரிவா,யுரமொரு மூன்றே டிரண்டுசூ ழுறந்தை யுத்தம தத்துவப் பொருளே.

தத்துவ முப்பத் தாறையுங் கடந்து தனிப்பர மாம்பெரு வெளியிற், சுத்தமெய்ஞ் ஞாநா நந்தமாய் விளங்குஞ் சோதியே யாதிநா யகனே, செத்தவ மானு னென்றிடா துலகர் சேவடி சேர்த்தருள் புரிவாய், புத்தமு தாய பொன்னிசூ ழுறந்தைப் புரியுறை விமலசங் கரனே. (௪0)

## வேறு.

சங்கரனென் ஞெருதிருப்பே ருனக்கே யேய்க்குஞ்
சதுமுகனு ரணன்முதல்மற் றமர ரியார்க்கும்
பங்கமிகு துயர்முழுது மொழித்தா நந்த
பரசிவபோ கந்தனையே கொடுத்த லாலே
கொங்குவிரி சந்தகின்மா மரங்கள் சாடிக்
குணகடலி னகடுகிழித் தேகும் பொன்னித்
துங்கமிகு நதிவலஞ்சூ ழுறந்தை வாழுஞ்
சுடரொளியே யடர்வினைதீர்த் தெனையாள் வாயே. (சக)

வாய்ந்தமணிப் பொதுநடஞ்செய் வள்ளா லுன்றன்
மலரடியை யனுதினமும் வழுத்தா தந்தோ
தேய்ந்தமதி நிகர்நுதலார் மயலிற் சிக்கித்
தீவினையே மிகப்புரியுஞ் சிறியேன் றன்னை
யாய்ந்தகலை கற்றுணர்நின் னடியார் கூட்ட
மணுகியவ ரடிப்பணியே செய்வித் தாள்வாய்
மாய்ந்தகரி சுடையமறை யவர்க ளோது
மறையொலியே நிறைபுறையூர் வாழுங் கோவே. (சஉ)

கோவடுவேல் வீரவா தித்த னோர்காற்
கொள்ளைமதம் பொழியொருருஞ் சரமா வேழ
மாவடுவின் வகிரனைய கண்ணு ரெல்லா
மயங்கமணி மறுகுலாப் போந்த போது
பூவடிகண் டகக்காற்குக் குடமொன் றந்தப்
பொங்கடியைப் பொருதலைத்துன் கருணை தன்னைத்
தூவடமென் னவனுணர வுணர்த்தச் சேவ
றுன்னுமொரு தென்னுறந்தை வாழுந் தேவே. (சங)

ஏரேறும் பெருமானே யிறையே யென்ற
னின்னுயிரே யின்னுயிர்க்கோர் துணையே நாயேன்

வாரேறு முலைமடவா ரல்கு லென்னு
மாளாத பாழ்ங்குழிவீழ்ந் தாழா வண்ணஞ்
சீரேறு நினதுதிரு வடியைப் போற்றுந்
திடஞான மருளிமட நீக்கி யாள்வாய்
தேரேறு முடிமன்னர் மூவர் போற்றுஞ்
செழுஞ்சுடரே திருவுறந்தை யமருந் தேவே. (௪௪)

வேயாருந் தோளியொரு பாகங் கொண்ட
வேதியனே மேதினியிற் பொருளில் லானைத்
தாயாரு நீயாரென் றேசா நிற்பார்
தமியேனவ் வறுமையினால் வருந்தா வண்ணஞ்
சேயாரு நினது திருவடியிற் சேர்த்துச்
செனனமர ணத்துயரம் போக்கி யாள்வாய்
காயாருங் கேளித்தண் டலைசூழ் கோழிக்
கண்ணுதலே வண்ணமைந்து கொண்டாண் டோனே.(௪௫)

நேரியர்கோ னெஞ்சமெனுங் கஞ்ச நீங்கா
நித்தபரி பூரணமாஞ் சுத்தத் தாளு
மாரியர்கோன் முனமொருகைக் கூர்வாள் கொண்டே
பறிகுறிவைத் தகன்றிடுநின் முடியும் பொல்லாக்
காரியமே மிகப்புரியும் வஞ்ச நாயேன்
கண்குளிரக் கண்டுதெரி சிப்ப தென்றோ
சீரியர்கள் போற்றுதிரு வுறந்தை மேய
சிற்பரனே யுற்பவநோ யொழித்தாள் வோனே. (௪௬)

ஆளுடைய பிள்ளைமணப் பந்தர்விருந் தினுக்கன்
றடைந்துதவி லேனுச்சா புரமதுமுந் தியதாற்
கோளுடைய கூற்றனுயிர் குடித்தநினை யடைந்தாற்
கொடுமரணத் துயர்நீங்கு மெனக்கருதி யடியேன்
வேளுடைய புரமெரிசெய் வித்தகவின் றனையே

விரும்பியடைந் தேனினது விருப்பமறிந் திலனே
வாளுடையந் தரத்தமரும் வானவர்க ளுளும்
வந்துவணங் குறுமுறந்தை மந்திரமா மணியே. (சஎ)

மணிக்குழையோ டமர்செய்மத ரரிக்க ணார்தம்
வஞ்சமயக் கினிற்றஞ்ச மின்றிமிக வீழ்ந்து
கணிக்கரும்வெந் துயர்கொண்மனத் தினைவிரைந்து மீட்டுன்
கழல்கருதப் புரிந்துபழ வினையகற்றி யருள்வாய்
குணிக்கருமோர் பொருளேநற் குணப்பெருமா மலையே
கோதில்குணங் குறிகள்கடந் தோதுறுநன் னெறியை
யெணிக்கருமா லயனரியெந் நாளு மேற்று
மெந்தையே திருவுறந்தை யிலங்குமொளி விளக்கே. (சஅ)

விளக்கொளியை மழுக்குமொளி மணிப்பூண் கொங்கை
மெல்லியர்கா மக்கலவி விரும்பியவ ரல்குற்
களக்கதனில் வீழ்ந்துமெலிந் தழலுமடி யேனைக்
களைகணு நினதுதிரு வடிமலர்சேர்த் தருள்வா
யளக்கமுடி யாதபெருஞ் செல்வந் தன்னு
ளளைகையம ராபதியு மடையவகங் கூரத்
துளக்கமறப் பெருகுதிரு வுறந்தை மேய
சுந்தரனே செந்துவர்வா யந்தரிநா யகனே. (சகூ)

நாயகனே நாயகன்மா ரறுபான் மூவர்
நண்ணுநின் தடிமலர்சேர்த் தென்னையினி தருள்வாய்
சாயகமைந் துடையமத வேளை யீன்ற
தண்டுளவ வண்டமர்வெண் டிரைப்பா லாழி
நேயமுட னினதுதிரு நடனங் காணு
நியமமே பூண்டபுலி முனிவ னீன்ற
சேயதனுக் களித்ததிரு வுறந்தை மேய
செல்வமே யெல்லையிலாக் கருணைத் தேனே.

## வேறு.

தேவர்க டேவன் றென்னுறந் தைக்கோன்
மூவர்கள் போற்று முன்னவ னென்பார்
நாவலூர் நமபி நவின்றிட வேவல்
சேவடி கன்றச் சென்றது மென்னே. (ருக)

என்னக மேவி யெனக்கருள் புரியும்
பொன்னவிர் சடிலப் புண்ணிய னெங்கோன்
றன்மக னூர்தி தன்னை விரும்பும்
பன்னக மேனி பரித்தமை யென்னே. (ருஉ)

மையமர் கண்டன் மன்னுறந் தைக்கோன்
செய்யமர் சோற்றுத் துறைச்சிவ னென்பார்
கொய்தயன் மண்டை கொண்டுக ரத்தில்
வைகலு மையம் வாங்கிய தென்னே. (ருங)

தென்கயி லாய மெனுஞ்சிர கிரியைத்
தன்குண திசையிற் றழுவுறந் தைக்கோன்
மன்பதை தோறு மன்னிய மர்ந்தும்
மன்பதை யுணரா மாயம தென்னே. (ருச)

மாயவ னாதிய வானவர் போற்றுந்
தூயவ னெங்கள் தொல்லுறந் தைக்கோன்
நேயமு டன்றிரு நீறுடல் பூசிப்
பேயொடு மாடிய பெற்றிய தென்னே. (ருரு)

பெற்ற முவந்தினி தேறிய பெம்மான்
நற்றவர் புகழுறந் தைப்பதி நாதன்
கற்றவர் போற்றுங் கௌரியோர் பாதி
பற்றிட வைத்தருள் பான்மையு மென்னே. (ருசா)

பான்மதி சூடும் பரனுறந் தைக்கோன்
மான்முதல் போற்று மன்னவ னென்பார்
தேன்மலி கொன்றைச் செஞ்சடை யோர்பால்
வான்மலி கங்கை வைத்தமை யென்னே. (௫௭)

தமைநினை பவர்வினை சாடுறந் தைக்கோ
னிமையவ ரிறைதொழு மிறையவ னென்பார்
தமரிற நிருதன் றலையொரு பத்து
மிமையினிற் போக்கெரு தேறிய தென்னே. (௫அ)

ஏற்றேறு கூற்படை யேந்துறந் தைக்கோன்
பேற்றை யளிப்பவர் பேணினர்க் கென்பார்
கூற்றை யுதைத்தருள் கோகன கத்தா
ளேற்றியு மெற்கரு ளாமையி தென்னே. (௫௯)

நேரலர் முப்புர நீறுப டும்படி
மூரல் புரிந்தருண் முன்னவ னென்பா
ராரல ருத்திய பாலமு துண்டவன்
றூரக மோதத் தாழ்ந்தது மென்னே. (௬0)

வேறு.

என்னக நினக்குத் தந்தே னின்னரு ளெனக்குத் தந்தாய்
பன்மல ருனக்குத் தந்தேன் பரகதி யெனக்குத் தந்தாய்
இன்னறுந் துதிநிற் கீந்தே னிணைமல ரடியெற் கீந்தா
யுன்னத முனிவர் போற்று முறந்தையி லிருக்குங் கோவே.

கோவினைப் புரக்க முன்னங் கோவினை யெடுத்த கோவுங்
கோவினை யகழ்ந்துங் காணக் கோகன கத்தாட் போதைக்
கோவினை யிழந்த நாயேன் கொடுந்தலை சூட்டி யாண்டான்
கோவினைப் பாலங் கொண்ட கோழிமா நகரத் தானே. (௬௨)

தாமொரு பதியே மற்றைச் சதுமுக ஞாதி யோர்க
ளேனமர் பசுக்க ளேயென் றுணர்தர வுலக ரியாருந்
தேனமர் துளவத் தோனுந் திசைமுகத் தவனுந் தேட
வானள வுயர்ந்து நின்றான் வாரணப் பதியு ளானே (௯௩)

பதிக்கெலாஞ் சிறந்த தாய பதியெனு முறந்தை தன்னிற்
றிதிக்குமா லயன்முன் னான தேவர்கள் போற்ற நாளுங்
கதிக்கொரு வித்தாங் காந்தி மதியெனுங் கௌரி யோடென்
விதிக்குமோர் முடிவுண் டாக மேவினை விமல வாழ்வே (௯௪)

விமலமா முனிவர் சித்தர் மேதகு பெரியோ ரெல்லா
மமலமா நினது செந்தா மரைமல ரடியைப் போற்றிக்
கமலநான் முகனுங் காணுக் கதியினை யடைய நாயேன் [வே.
சமலமாந் தனுவை யோம்பித் தளர்கின்றே னுறந்தை வாழ்

வாழ்வினை விரும்பி நாயேன் மண்ணிடைப் பலவா றாகப்
பாழ்வயிற் றினையோம் பற்குப் பட்டது போதும் போதுங்
கேழ்தனை யன்றி யில்லாக் கிளரடி மலரிற் சேர்த்தே
மூழ்வினை யகற்றி யாள்வா யுறந்தையி லிருக்குந் தேவே. ()

தேவகி மைந்தன் சென்னி சேவடி சூட்டி யாண்ட
மூவகி லங்கள் போற்று முனிதனை யாண்ட வெந்தாய்
பாவகி தன்னை யீன்ற பஞ்சவண் ணேசா நின்பொற் [வே.
சேவடி சேர்த்தாட் கொள்வாய் திருவுறந் தையில்வாழ் கோ

கோதுறு பிறவி யென்னுங் கொடுங்கடற் படிந்து நாளும்
பேதுறு கின்ற நாயேன் பெருந்துய ரகற்றி நின்பொற்
றூதுறு வாரி சப்பூத் தாளிணை சேர்த்தாட் கொள்வா
யோதுறு வளங்க ளெல்லா முறையுறை யூர்வாழ் வோனே.

நேற்றுளா ரின்று மாண்டு நீறுபட் டழியக் கண்டும்
போற்றிலே னுறந்தை யுன்றன் பொற்றளி யடைந்து நாயேன்

கீற்று வெண் மதியமோடு கிளரு மந்தாகி னிப்பே
ராற்றையுந் தரித்த வேணி யையவென் றுய்யு நாளே. (சுகூ)

நாளெவன் செய்யு நின்னை நாடொறும் வழுத்து மென்னைக், கோளெவன் செய்யும் பொல்லாக் கொடுந்தொழிற் கூற்றென் செய்யும், வாளுடை யசுரர்ச் சாடும் வச்சிர பாணி போற்றுந், தாளுடை மலருப் யானஞ் சூழ்திரு வுறந்தைத் தேவே. (எ0)

வேறு.

வேதா தாழும் வாரண மூதூர் வித்தகனே
தாதா தாவென் றுலகிற் றமியேன் றளராமற்
போதார் நின்றன் பொன்னடி யுகள முடிசூட்டி
நாதா நம்பா வென்று நவிற்றப் புரிவாயே. (எக)

வாயே யுறந்தைப் பதியை வண்ணன் மலரடியும்
வேயே புரையு மென்றோட் காந்தி மதியடியு
மாயே யகன்றின் படையத் தினமும் வாழ்த்துவையே
னீயே நல்லா யென்று நிகழ்த்தி யுய்வேனே. (எஉ)

உய்வா யுறந்தை மாநக ருறையு மைவண்ணன்
செய்வாய்ந தொளிருஞ் செங்கம லச்சே வடியிணையை
மைவாய்ந் தொளிர்கண் மங்கையர் மையல் வீழாமற்
பொய்வாய்ந் தொளிர்புன் மடமிகு நெஞ்சே போற்றுதியே.

போற்று மடியார் பொன்னுல கடையப் புரிந்தருளு
நீற்றொளி மேனிய னேயுறந் தைப்பதி நின்மலனே
தாற்றொடு சுளிமா மதகரி யைக்கொல் சக்கிரியா
மேற்றினி லிமவான் மகளுடன் வந்தற் கின்றருளே. (எச)

இன்றருள் செயினின் மகவுட னிமய மாதினையும்
நன்றினி தேத்திப் புகழுவ னுறநதை நகர்வாழும
பொன்றுத லில்லாப் புண்ணிய நின்றனை யும்புகழ்வேன்
குன்றினை யில்லா விண்டுவை வண்டாக் கொண்டோனே. ()

கொண்டலை யூர்ந்தொரு கோவினை யாளுங் கோமானு
மண்டாக ளுக்கன் றமுதை யளித்தவ னுடையனுங்
கண்டு வணங்குறந தைப்பதி மேவிய காமாரி
புண்டரி கத்திரு வடிமலர் புகவருள் செய்வாயே. (எசு)

செய்வாய்ந தொளிருறந் தைப்பதி மேவிய தெள்ளமுதே
பைவா ளரவப் பணியணி பஞ்ச வர்ணேசா
பொய்வா யுலகப் பற்றினை விட்டுன் பொன்னடியாம்
மெய்வாய் வீடடை யப்புரி வாய்வெள் விடையோனே. (எஎ)

விடையார் மதிலுறந் தைப்பதி மேவிய விண்ணவனே
யடையார் புரமூன் றெரியச் சிரித்த வாண்டகையே
கடையா ரினுங்கடை யேன்றனைக் காத்தருள் புரிவாயே
சடையார் கொன்றைத் தொடையாய் சம்போ சங்கரனே. ()

சங்கர னேசிவ சாமபச தாசிவ வென்றுனையே
பொங்குறு துயர்முழு தும்மக லப்புக ழச்செய்வா
யெங்குறை முழுதுந் தீர்த்தருள் காந்தி மதியென்றாய்
பங்குட னுறந்தைப் பதியமர் பஞ்ச வர்ணேசா. (எகூ)

ஈசா வுறநதைப் பதியை வண்ண வின்னமுதே
மாசாா நெஞ்ச முடையார் காணு மாதேவா
தேசார் நினது திருவடி மலரிற் சிறியேனை
யேசா வண்ணஞ் சேர்த்தருள் புரிவா யிறையோனே. (அ0)

## வேறு.

இறைகொளுறந் தைப்பதியி லென்னையினி தாண்டான்
மறைபுகழுங் காந்திமதி மங்கைமண வாளன்
பிறைகொளெயிற் றந்தகபின் னிகழ்வதுண ராமன்
மிறைகொளுரு வங்கொடனை மேவியெவன் செய்வாய். ()

செய்யபது மத்துறையுந் தேவையிவண் கூவிப்
பையவிவன் றன்னையினி மேற்படைப்பை யாயிற்
கொய்திடுவெ னின்னுமொரு தலையையெனக் கூறு
யுய்வையடி யார்க்கருளு முறந்தைநக ரானே. (௮௨)

நகரமக ரங்களென நவிலுமலம் போக்கி
யகரமென நின்றவெனை யருள்வகரஞ் சேர்த்துச்
சிகரமதாய்ச் செய்ததிரு வுறந்தைநகர் மேய
வுகரமதை யுள்ளபடி யுணர்வர்பெரி யோரே. (௮௩)

பெரியபொரு ளவைக்குமொரு பெரியபொரு ளாயுந்
தெரிவரிய சிற்றணுவிற் சிற்றணுவ தாயு
மரியபர கதியையடி யார்க்கருள்வ தாயு
முரியவொரு பொருளையுறந் தைப்பதிக்கண் டேனே. (௮௪)

கண்டுதரி சித்தவடி யேனையமன் கண்டு
கண்டுமொழி பேசியக லக்கடைக்கண் கண்டு
தொண்டுபுரி வார்களுடன் றொண்டுபுரி யென்று
விண்டுபுகன் றனுறந்தை வியனகரி லின்று. (௮௫)

இன்றுதிருக் காந்திமதி யம்மையுட னென்னைத்
தொன்றுவினை விண்டகலத் தொண்டுபுரி யென்றான்

பொன்றுதலி லாததிருப் பொன்னிநதி சூழுந்
தன்றுணையி லாதவுறந் தைத்தளியில் வாழ்வோன். (அசு)

வாழ்வினைமெய் யென்றுமதி மாழ்குமடி யேனைக்
கேழ்கிளர்செந் தாமரைமென் கேடிலடி சேர்த்ததான்
பாழ்கலியெ ழாதுபயன் படுகழனி சூழ்ந்து
தாழ்வையடை யாததனி நகருறந்தை யண்ணல். (அஎ)

அண்ண லுனை யன்றியகி லங்களிலை யென்றே
வண்ணமறை சொல்லியது வாய்மையென வின்றே
பண்ணவர்கள் போற்றுறந்தைப் பதியதனிற் கண்டே
னெண்ணமுடி யாததுய ரின்றகன்ற நானே. (அஅ)

நானெனவு மெனதெனவு நவிலுவதி லென்ன
வானதுமற் றொன்றுமிலை யாதலினா லன்றே
மோனமுடன் ஞானசன காதிமுனி வோர்கள்
வானவர்போற் றுறந்தைநகர் வள்ளலுனைக் கண்டார். (அகூ)

ஆர்மருவு சடையுடையம் புலியதளோ டாட
வார்மருவு கொங்கைமலை மாதுகளிப் பெய்தச்
சீர்மருவு தில்லைமணி மன்றினட மாடு
மேர்மருவு கழலிணைசேர்த் தாளுறந்தை யீசா. (கூ0)

வேறு.

ஈசனே யுறந்தை வாழு மிறைவனே போற்றி நாயேன்
பாசவே ரறுத்தாட் கொண்ட பஞ்சவர் ணேச போற்றி
மாசிலா மணியே மன்றின் மாநடம் புரிவாய் போற்றி
யாசக லடியா ருள்ளத் தமருமை வண்ண போற்றி. (கூக)

வண்ணமா மறையோன் முன்னு வானவர்க் கரசே போற்றி
வண்ணவா ரணங்கை யேந்து மாதவன் போல்வ ருந்தா
வண்ணமா வுறந்தை தன்னில் வந்தடி காட்டி யாண்ட
வண்ணமோ ரைந்துங் கொண்ட வள்ளலே போற்றி போற்றி

போற்றிமெய் யடியார் சூழ்ந்து புகழ்திரு வுறந்தை வாழ்வே
யாற்றொடு கொன்றை தும்பை யணிந்தவை வண்ண போற்றி
மாற்றறி யாத செம்பொன் மலையினைக் குழைத்தாய்போற்றி
நீற்றொளி பழுத்த மேனி நின்மலா போற்றி போற்றி.(௬௩)

நின்மலா போற்றி மன்றி னிருத்தனே போற்றி நாயே ன், புன்மல மறுத்தாட் கொண்ட புண்ணியக் கொழுந்தே போற்றி, வன்மனத் தவர்கள் காணு மாநக ருறந்தை வாழு ஞ், சொன்மனக் கெட்ட வொண்ணுச் சோதியே போற்றி போற்றி. (௬௪)

சோதியா தெனையாட் கொண்ட சுயம்பிர காச போற்றி
யாதியேயு றந்தை வில்வ வனத்தமர்ந் தருள்வாய் போற்றி
பாதியோர் பெண்ணை வைத்த பஞ்சவர் னேச போற்றி
சாதிநான் மறைகள் போற்றுந் தத்துவப் பொருளே போற்றி

தத்துவ ரூபஞ் சுத்தி தரிசன முதலாக் கூறும்
பத்தினு ளிறுதி யாய பரசிவ போகந் துய்க்கச்
சத்தறி வின்ப மான தந்தையே செய்வாய் போற்றி
முத்தர்போற் றுறந்தை மூக்கிச் சரத்தமர் முதல்வா போற்றி

முதல்வனே யுறந்தை வாழு முக்கண்வா னவனே போற்றி
கதமில்மா முனிவர் போற்றுங் காசிபன் பன்னி தன்னைப்

புதல்வன்கார்க் கோட ளேடு புரிந்தினி தளித்தாய் போற்றி
மதகரி முகனை யீன்ற வள்ளலே போற்றி போற்றி. (கூள)

வள்ளலே யுறநதை வில்வ மாநிழ லமர்நதாய் போற்றி
தெள்ளிய வறிஞர் போற்றுஞ் சிவபுரத் தரசே போற்றி
கள்ளுலா மலர்ப்பூஞ் சோலைக் காவிரி நாடன் போற்று
மள்ளிலைச் சூல மேநது மண்ணலே போற்றி போறறி.(கூஅ)

அண்ணலே யுறநதை வாழு மப்பனே போற்றி நாயேன்
கண்ணிணை களிக்கக் காட்சி கொடுத்தருள் கடவுள் போற்றி
தண்ணறுக் கொழிக்குஞ் செய்ய தாமரைமுகத்தாய் போற்றி
பண்ணவர் வணங்கி வாழ்த்தும் பஞ்சவர் னேச போற்றி. ()

பஞ்சவர் னேச போற்றி பகர்வில்வா ரணிய போற்றி
மஞ்சவிர் கூந்தற் காந்தி மதிமண வாள போற்றி
நஞ்சமர் கண்டத் தெண்டோ ணற்பரம் பொருளே நின்றன்
செஞ்சர ணங்க ளான திருவளர் கமலம் போற்றி. (க00)

ஆகச்செய்யுள் - க0க.

## திருவுறந்தைப் பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

ஸ்ரீ பஞ்சவர்னேசர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.